# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## காவல்துறை
## மானியக் கோரிக்கை எண். 22

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
## மானியக் கோரிக்கை எண். 23

அறிவிப்புகள்

2021 - 2022


**மு.க. ஸ்டாலின்**

முதலமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2021

# காவல்துறை

## I. புதிய பிரிவுகள் உருவாக்குதல்.

1. சவாலான மற்றும் முக்கிய இணையவழி குற்றங்களை புலனாய்வு செய்யவும் காவல் ஆளிநர்களுக்கு சைபர் குற்றங்களை புலனாய்வு செய்ய தகுந்த பயிற்சி அளிக்கவும் **"மாநில இணையதளக் குற்றப் புலனாய்வு மையம்"** (State Cyber Crime Investigation Centre) சென்னையில் அமைக்கப்படும். இம்மையம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான இணையவழி குற்றங்களை தடுப்பதற்கும், புலனாய்வு மேற்கொள்வதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் சிறப்பு கவனம் செலுத்தும்.

2. மெரினா கடற்கரையில் பொதுமக்கள் நீரில் மூழ்கி இறக்கும் நிகழ்வுகளைத் தடுக்க சென்னை காவல்துறையில் **மெரினா கடற்கரை உயிர் காப்பு பிரிவு** (Marina Beach Life Guard Unit) ஆரம்பிக்கப்படும். கடலோர காவல்படை ஆய்வாளர் தலைமையில் இயங்கும் இப்பிரிவில் கடலோர குழுமம் மற்றும் தீயணைப்புத் துறை மீட்பு வீரர்களுடன் ஒப்பந்த அடிப்படையில் 12 மீனவர்கள் பணி அமர்த்தப்படுவார்கள்.

3. தீவிர குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், குற்ற விகிதத்தைக் குறைப்பதற்கும் மொத்தம் **ரூபாய் 8 கோடியே 42 இலட்சம் செலவில்** சென்னை தெற்கு மற்றும் வடக்குப் பிரிவுகளில் தலா ஒரு **தீவிர குற்றவாளிகள் தடுப்புப் பிரிவு** உருவாக்கப்படும்.



4. சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய சிறுவர் மற்றும் சிறுமியர் தவறான வழியிலும் எந்த குற்றச் செயலிலும் ஈடுபடாமல் இருக்க சிறுவர் சிறுமியர் மன்றம் ஏற்படுத்தப்பட்டு, இவை அவர்களை நல்வழிப்படுத்தவும், உரிய கல்வி உதவி அளிக்கவும் **ரூபாய் 38.25 இலட்சம் செலவில் 51 சிறார் மன்றங்கள்** (Boys and Girls Club) உருவாக்கப்படும்.

5. காவல் துறையினரின் முயற்சிகளில் **மாணவர்களை ஈடுபடுத்தும் பிரிவு** (SIRPI - Students in Responsible Police Initiatives) மொத்தம் **ரூபாய் 4 கோடியே 25 இலட்சம் செலவில்** சென்னையிலுள்ள 100 பள்ளிகளில் ஏற்படுத்தப்படும்.

6. சென்னை பெருநகர காவலில் கூட்டமான இடங்களையும், நீண்ட தூர சாலைகளையும் கண்காணிப்பதற்கென **ரூபாய் 3 கோடியே 60 இலட்சம் செலவில் நடமாடும் டிரோன் காவல் அலகு** ஏற்படுத்தப்படும்.

## II. காவல் துறையினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்துதல்.

7. காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் குறைகளை கனிவோடு கேட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் **வரவேற்பாளர்கள்** நியமிக்கப்படுவார்கள். இதற்காக, பல ஆண்டுகளாக காத்திருக்கும் **மறைந்த காவலர்களின் வாரிசுகள் 1132 பேருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம்** வழங்கப்படும். இந்த பணிக்காக கணினிகள் மற்றும் மென்பொருட்கள் புதிதாக கொள்முதல் செய்யப்படும். இதற்கான மொத்த தொடராச் செலவினம் **ரூபாய் 33 கோடி** ஆகும்.

8. பொதுமக்களோடு தொடர்பு கொள்ளும் திறனை மேம்படுத்த 1,20,000 காவல் ஆளிநர்களுக்கு **ரூபாய் 10 கோடி செலவில் சென்னை அண்ணா மேலாண்மை மையத்தின் மூலம் பயிற்சி** வழங்கப்படும்.



9. மீனவ இளைஞர்கள் இந்திய கடற்படையில் ஒப்பந்த அடிப்படையில் சேரும் விதமாக அவர்களுக்கு **கடலோர காவல் படைக் குழுமம் மூலம் ரூபாய் 90 இலட்சம் செலவில் ஆறு மாத பயிற்சி** வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் இவ்விளைஞர்கள் மற்ற இந்திய பாதுகாப்புப் படையில் சேரவும் வாய்ப்பு அதிகரிக்கும்.

10. கடலோர பாதுகாப்பு காவல் படையினருடன் இணைந்து பணி புரிய **1000 மீனவ இளைஞர்கள் ஊர்க்காவல் படையினராக பணியமர்த்தப்படுவர்.** இதற்கான மொத்த தொடர் செலவு **ரூபாய் 3 கோடியே 40 இலட்சம்** ஆகும்.

11. காவலர் - பொதுமக்களுக்கிடையேயான உறவை மேம்படுத்தவும், காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் **காவல் ஆணையம் ஒன்று மீண்டும் அமைக்கப்படும்.**

12. சென்னை மாநகரில், மண்டல அளவில் நான்கு **சைபர் குற்றக் காவல் நிலையங்கள்** அமைக்கப்படும். இதற்கென மறுவிநியோக (Redeployment) முறையில் தேவையான பணியாளர்கள் பயன்படுத்தப்படுவர்.

13. பொதுமக்கள் காவல் உயர் அதிகாரிகளை **இணையதள காணொளி மூலம்** சந்தித்து **புகார் அளிக்கும் வசதி** அறிமுகப்படுத்தப்படும். இதனால் உயர் அதிகாரிகளை பார்க்கப் பயணம் மேற்கொள்ளவும், அலுவலகங்களில் காத்திருக்க வேண்டிய அவசியமும் இருக்காது.

14. **பொதுமக்களின் பிரச்சினைகளை** காவல் நிலைய அதிகாரியிடம் தெரிவிக்க ஒரு **கைபேசி செயலி** உருவாக்கப்படும். காவல் நிலைய அதிகாரியின் விசாரணை அறிக்கை அந்த செயலியில் தரவேற்றம் செய்யப்படும்.



15. **வெளிநாடுகளில் வாழும் இந்திய குடிமக்களின் குறைகளைக் களைய** காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் **தனிப்பிரிவு** அமைக்கப்படும். இணையத்தின் மூலம் பதிவு செய்யப்படும் புகார்கள் மீது துரித விசாரணை செய்யவும் அவர்களுக்கு விசாரணை முடிவுகளை தெரிவிப்பதும் இப்பிரிவின் வேலையாக இருக்கும்.

16. சுற்றுலாத் தலங்களில் பொதுமக்களுக்குப் பாதுகாப்பும், வழிகாட்டுதலும் வழங்க **சுற்றுலா காவல் துறை** அமைக்கப்படும். சுற்றுலா காவல் துறையினருக்குத் தனி பயிற்சி வழங்கப்படும்.

17. இந்திய குடியுரிமைத் திருத்தச் சட்டம், மீத்தேன் / நியூட்ரினோ மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் எட்டு வழிச்சாலை திட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள், பத்திரிக்கைகள் மீது முந்தைய அரசால் 5,570 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளை திரும்பப் பெற இந்த அரசு ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது. அதேபோல், **நீட் தேர்வு மற்றும் டாஸ்மாக் (TASMAC) மதுக் கடைகளுக்கு** எதிரான போராட்டம் நடத்தியவர்கள் மீது முந்தைய அரசால் பதிவு செய்யப்பட்ட **வழக்குகளை திரும்பப் பெற நடவடிக்கை** எடுக்கப்படும்.

## III. பணியாளர் நலன்

18. காவல் துறையினரின் நலன்களைப் பாதுகாக்கக் காவலர்களுக்கு வழங்கப் படும் **இடர்ப்படி 800 ரூபாயிலிருந்து 1000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.** இது அனைத்துத் தரப்பினருக்கும் பொருந்தும்.



19. நிலுவையிலுள்ள **சிறு தண்டனைகள்** கைவிடப்படும். இதனால் சிறு தண்டனைகள் பெற்ற காவல் ஆளிநர்கள் பதவி உயர்வு மற்றும் பிற சலுகைகள் பெறுவார்கள்.

20. காவலர் முதல் ஆய்வாளர் வரை தங்கள் அடையாள அட்டைகளை காண்பித்து பேருந்துகளில் தாங்கள் பணி செய்யும் மாவட்டத்திற்குள் பயணம் செய்யலாம். இதற்காக '**நவீன அடையாள அட்டை**" வழங்கப்படும்.

21. காவலர்கள் தங்கள் உடல் நலனை பேணிக் காத்திட ஏதுவாகவும், தங்களது குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடுவதற்காகவும், இரண்டாம் நிலை காவலர்கள் முதல் தலைமைக் காவலர் வரையிலான ஆளிநர்களுக்கு **வாரத்தில் ஒரு நாள் ஓய்வு** வழங்கப்படும்.

22. காவலர்களுக்கு ஆண்டுதோறும் அரசு மருத்துவ மனைகளில் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுவதுபோல, இனி அவர்களின் வாழ்க்கைத் துணைவியர்க்கும் அளிக்கப்படும். **பெண்களுக்கான சிறப்பு மருத்துவ பரிசோதனையும்** இதில் சேர்க்கப்படும்.

23. காவல் ஆளிநர்களின் தற்செயல் விடுப்பினை ஒப்புதல் அளிக்கும் **மென்பொருள் (CLAPP) APP ஒன்று ரூபாய் 10 இலட்சம் செலவில்** உருவாக்கப்படும்.

24. காவலர்கள் தங்கள் உடல் நலனைப் பேணும் பொருட்டு காவல் நிலையங்களில் **உடற்பயிற்சி மேற்கொள்ள 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகரங்களில் உடற்பயிற்சி கூடம் அமைக்க தலா ரூபாய் இரண்டு இலட்சம் வீதம் ரூபாய் 90 இலட்சம் வழங்கப்படும்.**

25. காவலர்களின் குறை தீர்ப்பதற்காக மாவட்ட அளவிலும், சரக அளவிலும் மண்டல அளவிலும் ஒரு புதிய நடைமுறை உருவாக்கப்படும். இதற்காக **ரூபாய் 25 இலட்சம் செலவில் ஒரு தனிச் செயலி அறிமுகப்படுத்தப்படும்.** இதன்மூலமாக காவலர்கள் தங்கள் மனுக்களை எளிதில் சமர்ப்பிக்க வசதி ஏற்படுத்தப்படும்.



26. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு பணியாற்றும் மாநில நுண்ணறிவுப் பிரிவு, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, பொருளாதாரக் குற்றப்பிரிவு, கடலோரக் காவல் படை, இரயில்வே காவல் படை மற்றும் காவலர் பயிற்சி பள்ளியில் பணிபுரியும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலானோர்க்கு சென்னை மாநகர காவல் துறையில் வழங்கப்படுவது போல் **உணவுப்படி** மாதந்தோறும் வழங்கப்படும். இதற்கான மொத்தத் தொடர் செலவினம் **ரூபாய் 14 கோடி** ஆகும்.

27. காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்குத் தற்போது வழங்கப்படும் வீடுகளின் அளவை விட விகிதாச்சாரப்படி உயர்த்தி வழங்கப்படும்.

28. இரண்டாம் நிலை காவலரிலிருந்து முதல் நிலைக் காவலராகவும், முதல் நிலைக் காவலரிலிருந்து தலைமைக் காவலராகவும், தலைமைக் காவலரிலிருந்து சிறப்பு உதவி ஆய்வாளராகவும் **பதவி உயர்வுகளுக்கான காலவரம்பை ஆய்வு செய்ய ஓர் உயர்மட்டக்குழு** அமைக்கப்படும்.

29. புதிதாக அமைக்கப்பட்ட ஆறு மாவட்டங்களிலும் **காவலர் அங்காடிகள்** நிறுவப்படும்.

30. காவல் துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின் ஒரு பகுதியாக **சிறப்பு குறைதீர்க்கும் முகாம்கள்** ஏற்படுத்தப்படும்.

31. காவல் நிலையங்களில் உடனடி மற்றும் அவசர செலவுகளைச் சமாளிக்க ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் **ரொக்க சில்லறை செலவின நிதி (Cash Contingency Fund) உயர்த்தப்படும்.**



## IV. வாகனங்கள்

32. அனைத்து காவல் ஆணையரகங்களிலும் (சென்னை நீங்கலாக) ரோந்துப் பணிக்காக, ஒவ்வொரு காவல் நிலையத்துக்கும் புதிதாக **நான்கு சக்கர வாகனங்கள் மொத்தம் ரூபாய் 10 கோடி செலவில்** வழங்கப்படும். இதனால் நகர்ப்புறங்களில் காவல் துறை நடவடிக்கை துரிதப்படுத்துவதோடு, குற்றவாளிகளை கண்காணிப்பதும் தீவிரமாகும்.

33. நவீன காவல் கட்டுப்பாட்டு அறையை பலப்படுத்தும் விதமாக **ரூபாய் 9 கோடியே 59 இலட்சம் செலவில்,** பழுதடைந்துள்ள 62 ரோந்து வாகனங்களுக்கு பதிலாக **புதிதாக 62 வாகனங்கள்** வாங்கப்படும்.

34. காவல் துறையில் கழிவு செய்யப்பட்ட காவல் வாகனங்களை ஏலம் விடும் முறையை எளிமையாக்கி, சம்பந்தப்பட்ட காவல் ஆணையர் / காவல் கண்காணிப்பாளருக்கு **ஏலம் விடும் அதிகாரம்** வழங்கப்படும். இதனால் அரசுக்கு வருமானம் வரும் நிலை ஏற்படும்.

35. சுமார் 10 வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு பதிலாக **ரூபாய் 9 கோடியே 43 இலட்சம் செலவில் 57 ரோந்து வாகனங்களும் 4 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களும் வாங்கப்படும்.**

## V. கட்டடங்கள்

36. ஆயிரம்விளக்கு பகுதியில் Mansion site என்ற இடத்தில் **ரூபாய் 275 கோடியே 76 இலட்சம் செலவில் 896 காவலர்/தலைமைக் காவலர் குடியிருப்புகள்** கட்டப்படும்.

37. அலுவல் நிமித்தமாக சென்னை வரும் காவலர்கள் தங்குவதற்கு ஏதுவாக கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பில் **ரூபாய் 16 கோடியே 20 இலட்சம் செலவில் 450 காவலர்கள் தங்குமிடம்** (Barracks) கட்டப்படும்.



38. காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்க்கு வீடு கட்டித் தரும் திட்டம் திருவாரூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

39. கோவை காந்திபுரத்தில் 1.4 ஏக்கர் இடத்தில் **140 காவல்துறை அதிகாரிகளுக்கான குடியிருப்புகள் ரூபாய் 54 கோடி செலவில்** கட்டப்படும்.

## VI. புதிய முயற்சிகள்

40. வங்கி / வேலை மோசடி, பதிவுரு மோசடி மற்றும் இணையக் குற்றங்கள் ஆகியவற்றை புலன் விசாரணை செய்ய **ரூபாய் ஒரு கோடி செலவில் நிபுணர்களின் (Hiring of Experts) சேவை** பயன்படுத்தப்படும்.

41. பெருநகர போக்குவரத்துக் காவல், போக்குவரத்தினை சீர்செய்ய தடுப்பு அரண்களைப் பயன்படுத்தி வருகின்றது. இத்தடுப்பு அரண்களை **இந்திய சாலைக் குழுமத்தின்** (Indian Road Congress) **வரைமுறைப்படி பழுதுபார்க்கவும் / மாற்றியமைக்கவும் ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சம்** செலவிடப்படும்

42. தமிழ்நாட்டில் 249 காவல் உட்கோட்டங்கள் உள்ளன. 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இந்த அரசு **அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம்** என்ற வகையில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்க நடவடிக்கை எடுக்கும்.

## VII. புதிய பதவி உருவாக்குதல்.

43. சென்னை பெருநகர காவலில் உள்ள சிசிடிவி வலைப்பின்னல் மாநிலத்திலேயே மிகப் பெரியதாகும். இதனை சிறப்பாக மேற்பார்வையிட **துணை காவல் ஆணையாளர் (தொழில்நுட்பம்)** என்ற பதவி **ரூபாய் 72.59 இலட்சம் செலவில்** ஏற்படுத்தப்படும்.

44. சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, கடத்தப்பட்ட அனைத்து சிலைகளையும் வல்லுநர்களின் ஒத்துழைப்புடன், மீண்டும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.



# தடய அறிவியல் துறை

45. தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் **ரூபாய் 7 கோடியே 30 இலட்சம்** செலவில் புதியதாக **மரபணு ஆய்வுப் பிரிவு** துவக்கப்படும்.

46. மதுரை மற்றும் திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் **ரூபாய் 5 கோடியே 49 இலட்சம் செலவில்** புதியதாக **கணினி தடயவியல் பிரிவுகள்** துவக்கப்படும்.

47. அரியலூர், தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை ஆகிய காவல் மாவட்டங்களுக்கு தலா ஒரு இயங்கும் **தடய அறிவியல் ஆய்வகம்** மொத்தம் **ரூபாய் 5 கோடியே ஒரு இலட்சம் செலவில்** உருவாக்கப்படும்.

48. சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்கு உட்பட்டு செயல்பட்டு வரும் இரண்டு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர் ஆகிய காவல் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் இயங்கும் தடய **அறிவியல் ஆய்வகங்களின் செயல்திறன் ரூபாய் 0.92 கோடி செலவில்** மேம்படுத்தப்படும்.



# தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

## I. புதிய உபகரணங்கள் வாங்குதல்

49. அனைத்து தீயணைப்பு வீரர்களுக்கும் தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள் (Personal Protective Equipments) வழங்கும் திட்டத்தின்கீழ் **ரூபாய் 8 கோடியே 10 இலட்சம் செலவில் 1350 தற்காப்பு உடைகள்** அதற்குரிய தீ பாதிக்காத காலணிகள் மற்றும் தலைக்கவசங்கள் ஆகியவற்றுடன் வழங்கப்படும்.

50. தீயணைப்பு பணியாளர்கள் மீட்புப்பணியின் போது தனித்த அடையாளத்துடன் விளங்கவும், சிறப்பாக செயல்படவும் ஏதுவாக **பாதுகாப்பு உபகரணங்களுடன் கூடிய மீட்பு உடைகள் ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் செலவில் 3000 எண்ணிக்கையில் வாங்கி வழங்கப்படும்.**

51. தீயணைப்பு பணியின்போது புகை மற்றும் நச்சு வாயுக்களிலிருந்து தீயணைப்புப் பணியாளர்களைக் பாதுகாக்கும் விதமாக **ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் செலவில் 350 எண்ணிக்கையில் மூச்சுக்கருவிகள்** (Self contained breathing apparatus sets) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்கு வாங்கி வழங்கப்படும்.



52. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை பணியாளர்களின் பயிற்சி வசதிகளை நவீனப்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில் அமைய உள்ள **மாநில பயிற்சி கழகத்தில்** (Tamil Nadu Fire and Rescue Services Academy) **ரூபாய் 20 கோடி செலவில் நிகழ்நேர மாதிரி பயிற்சிக் கூடம்** (Fire and Rescue Services training simulator) ஒன்று நிறுவப்படும்.

## II. வாகனங்கள் மற்றும் ஊர்திகள்

53. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாடு முடிந்து கண்டனம் செய்யப்பட்ட நீர்தாங்கி ஊர்திகளுக்கு பதிலீடாக முதற்கட்டமாக 25 புதிய **நீர்தாங்கி ஊர்திகள் ரூபாய் 18 கோடியே 75 இலட்சம் செலவில்** வழங்கப்படும்.

54. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையிலுள்ள மாவட்ட அலுவலர்கள் தங்கள் பணிகளை செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக கண்டனம் செய்யப்பட்ட 9 சீருந்துகளுக்கு பதிலீடாக **புதிய ஊர்திகள் ரூபாய் 65 இலட்சம் செலவில்** வாங்கி வழங்கப்படும்.

55. கட்டட இடிபாடுகள், சாலைவிபத்துக்கள் மற்றும் புயல், வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளின்போது மீட்புப்பணிகளை திறம்பட மேற்கொள்ள ஏதுவாக **ரூபாய் 9 கோடி செலவில் 10 சிறிய அவசரகால மீட்பு ஊர்திகள்** (Mini Emergency Rescue Tender) வாங்கி வழங்கப்படும்.

56. பெருந்தீவிபத்துக்களின் போது தேவைப்படும் அதிக அளவிலான தண்ணீர் தேவையினை கருத்தில் கொண்டு **ரூபாய் 16 கோடி செலவில்** 20 பெரும தண்ணீர் லாரிகள் (Water bowzers) வாங்கி வழங்கப்படும்.

57. வளர்ந்துவரும் நகரமயமாக்கலின் தீயணைப்புச் சேவையினை கருத்திற்கொண்டு **ரூபாய் 11 கோடி செலவில் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய வான்நோக்கி நகரும் ஏணியுடன் கூடிய தீயணைப்பு - மீட்பு ஊர்தி** (Aerial Ladder Platform) ஒன்று திருப்பூர் மாநகரத்திற்கென பிரத்யேகமாக வாங்கி வழங்கப்படும்.



58. மலைப்பாங்கான பகுதிகளில் தீயணைப்புச் சேவையினை செவ்வனே செய்ய ஏதுவாக 7 **அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டி** (Ultra High Pressure Water Tender) **ரூபாய் 5 கோடியே 60 இலட்சம் செலவில்** வாங்கி வழங்கப்படும்.

## III. கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள்

59. கீழ்க்கண்ட 9 இடங்களில் உள்ள தீயணைப்பு மீட்புப்பணி நிலையக் கட்டடங்கள் **ரூபாய் 45 கோடியே 8 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

அ. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 6 கோடியே 99 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

ஆ. தென்சென்னை மாவட்டம் தேனாம்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 5 கோடியே 94 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

இ. தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 3 கோடியே 26 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

ஈ. தேனி மாவட்டம், கடமலைக்குண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 2 கோடியே 55 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

உ. விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 2 கோடியே 31 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

ஊ. சென்னை புறநகர் மாவட்டம், செங்குன்றம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 3 கோடியே 78 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

எ. சென்னை புறநகர் மாவட்டம், மணலி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 6 கோடியே 42 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

ஏ. வடசென்னை மாவட்டம், வண்ணாரப்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 6 கோடியே 98 இலட்சம் செலவில்** கட்டப்படும்.

ஐ. சென்னை புறநகர் மாவட்டம், அம்பத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையம் **ரூபாய் 6 கோடியே 85 இலட்சம் செலவில்** கட்டப்படும்.



60. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென**

அ. சென்னை புறநகர் மாவட்டம் செங்குன்றம் 53 குடியிருப்புகள் (3 அலுவலர்கள் மற்றும் 50 பணியாளர்கள்),

ஆ. தேனிமாவட்டம் - போடிநாயக்கனூர் - 10 குடியிருப்புகள் ( 2 அலுவலர்கள் மற்றும் 8 பணியாளர்கள்),

இ. திருச்சி மாவட்டம் - துறையூர் - 18 குடியிருப்புகள் ( 2 அலுவலர்கள் மற்றும் 16 பணியாளர்கள்),

ஈ. இராணிப்பேட்டை மாவட்டம் - இராணிப்பேட்டை - 19 குடியிருப்புகள் ( 2 அலுவலர்கள் மற்றும் 17 பணியாளர்கள்)

ஆகிய இடங்களில் **ரூபாய் 25 கோடியே 43 இலட்சம் செலவில்** மொத்தம் **100 குடியிருப்புகள் கட்டப்படும்.**

**மு.க. ஸ்டாலின்**
**முதலமைச்சர்**